சுவிஸ் தமிழ் கத்தோலிக்க அருட்பணி பேரவை

# Swiss Tamil Catholic Pastoral Council

**“தம் உயிரைக் காக்க விரும்புவோர் அதை இழந்து விடுவர்.
என் பொருட்டுத் தம் உயிரை இழப்போரோ அதைக் காத்துக் கொள்வர்”
(மத்தேயு 10:39)**

இலங்கை மண்ணில் கிறிஸ்தவர்களின் மிக முக்கிய திருவிழாவான கிறிஸ்து உயிர்ப்பு பெருவிழா ஞாயிறு அன்று (21.04.2019) மனித குலத்திற்கு எதிரான மிலேச்சத்தனமான தாக்குதல்கள் தேவாலயங்களிலும், பிற இடங்களிலும் நடாத்தப்பட்ட நிகழ்வுகள் உலக மாந்தரின் மனசாட்சியை குலுக்கியுள்ளது. மூளைச்சலவை செய்யப்பட்டு இக்கொடூரத்தை நடாத்திய மூர்க்கர்களையும் அச்சக்திகளை இயக்கிய சூத்திரதாரிகளையும் நாம் கடுமையாகக் கண்டிக்கின்றோம். சாவை வென்று உயிர்த்த இயேசு கிறிஸ்துவின் பாஸ்கா பெருவிழாவில் தேவலாயங்களில் சிந்தப்பட்ட இரத்தம் மறைசாட்சியத்தின் மணிமுடியாகட்டும். அநியாயமாகக் கொல்லப்பட்ட அப்பாவிகளின் ஆன்மாக்கள் ஆண்டவன் சந்நிதியில் நிலைவாழ்வு காண செபிக்கின்றோம். அவர்களுக்காக சுவிஸ் தமிழ் கத்தோலிக்க மக்கள் அனைவரும் அஞ்சலிக்கின்றோம். காயமுற்றவர்கள் சீக்கிரம் குணமடைய இறையருள் வேண்டுகின்றோம். உறவுகளை இழந்து ஆறா துயருற்றுள்ள அனைவருக்கும் இறையாறுதல் கிட்ட ஆசித்து ஆழ்ந்த அனுதாபங்களை இத்தால் தெரிவிக்கின்றோம்.

பேரினவாதத்தின் பெரும் சூழ்ச்சி ஆண்டாண்டாக ஈழத்தமிழரின் உயிர், உடைமை, கலை, கலாச்சார, பண்பாட்டு, அரசியலை கொன்றழித்து ஏப்பம் விடுவதின் தொடர்ச்சியாக இக்கொடூரம் அரங்கேறுகிறதோ எனும் சந்தேகம் எழுகின்றது. தற்போது மதவாதத்தை பேரரக்கனாக வளர்த்தெடுக்க பெரும் தீனி போடப்படுகிறது. எனவே இலங்கையின் தமிழர்களான சைவர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் அனைவரும் இக்காலகட்டத்தில் தமிழர் எனும் ஒன்றிணைந்த அடையாளத்தில் ஒற்றுமையாக செயற்பட்டு வாழ வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதை வலியுறுத்துகின்றோம்.

**“உங்கள் பகைவரிடம் அன்பு கூறுங்கள், உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்” (மத்தேயு 5:44) மன்னியுங்கள், மன்னிப்புப் பெறுவீர்கள் (லூக்கா 6:37)** என்றுரைத்த எம் பெருமான் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியின்படி இக்கொடூர செயல்களை செய்தவர்களை இறை துணையில் மன்னிப்பதோடு அவர்களின் மனமாற்றத்திற்காகவும் செபித்து நிற்கின்றோம்.

SMLogu 02-05-2019.

அருட்பணி.சூ.டக்ளஸ் மில்ரன் லோகு
தலைவர்

02.05.2019

திரு. ஆரோக்கியம் சத்தியசீலன்
செயலர்

Pfr. S. Douglas Milton Logu
Tamilenseelsorger für die Schweiz
Aemtlerstrasse 43, 8003 Zürich
Switzerland
Tel: +41 (0) 44 461 56 43, Mobil: +41 (0) 79 648 00 09

சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் Katholische Tamilenseelsorger für die Schweiz